www.tamilarangam.net

# சிறுவர் அமுதம்

19.02.98

எண்ணம் .9 கிண்ணம்.2




சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

Kinder literarisches Magazin

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மகாபாரதம்



அரச குமாரர்களின் வில்வித்தைகள் அரங்கேறி முடிந்தது. அஸ்த்தனாபுரத்து மக்களும், வலிமை மிக்க இராச்சியம் இருக்கும் போது கவலையில்லாமல் தாங்கள் வாழும் நிலையை எண்ணி ஆனந்தம் கொண்டிருந்தனர். அதேவேளையில், அரசகுமாரர்களின் குருவாகிய துரோணர் ஒருநாள் அரசகுமாரர்களைத் தன்னிடம் வரவழைத்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர் அவர்களை நோக்கி, "பெருமைக்குரிய என் அன்புச் சிறுவர்களே! நான் உங்களுக்குச் செய்ய வேண்டிய பணியைச் சரியாக நிறைவேற்றி இருக்கிறேன் என்பதை உங்கள் அரங்கேற்றத்தின் போது பலரும் அறியச் செய்தீர்கள். இனி எனக்குக் குருதட்சணை நீங்கள் தர வேண்டும். அதற்கு உறுதி தருவீர்களா?" என்று கேட்டார். அரசகுமாரர்கள் எல்லோரும் "என்ன செய்ய வேண்டும்? குருதேவரே" என்று பணிந்து நின்றார்கள்.

"செல்வங்களே, அது எளிதானதல்ல!. ஆனாலும் அதை உங்களிடம் கேட்காமல் யாரிடம் கேட்க முடியும்! நானும், பாஞ்சால தேசத்து அரசனாகிய யாகசேனனும் இளம் வயதில் நண்பர்களாக இருந்தோம். அவன் தான் அரசனாகும் வேளையில், எனக்குப் பாதி அரசைத் தருவதாகக் கூறியிருந்தான். பின் நாங்கள் இருவரும் பிரிந்து விட்டோம். அவன் அரசனாகி விட்டான். நானோ என் மனைவியுடனும், குழந்தையுடனும் வறுமையில் வாழ்ந்தேன்.

குழந்தைக்கு உணவில்லாத காரணத்தால் அவனிடம் பசு ஒன்றும், விவசாயம்

www.tamilarangam.net

செய்வதற்குச் சிறிது நிலமும் கேட்டேன். அவனோ, இறுமாப்புடன் என்னை ஏசி விட்டான். அரசசபையில் என்னை அவமதித்து விட்டான். என்னை வேதனைப் படுத்திய அவனை நான் இப்போது வேதனைப் படுத்தினாலேயே என் மனம் அமைதிப்படும். எனக்குக் குருதட்சணையாக நீங்கள் அவனோடு போர் செய்து, அவனை வென்று அவனைக் கட்டி இழுத்துக் கொண்டு வருவீர்களா? பாஞ்சாலனோ சிறந்த வீரன். அவனை உங்களால் வெல்ல முடியுமா? அப்படிச் செய்தால் அதுவே என் குருதட்சணையாகக் கருதிக் கொள்வேன்." என்றார்.

அரசகுமாரர்கள் மிக மகிழ்ச்சியுடன் படைகளையும் சேர்த்துக் கொண்டு பாஞ்சால நாட்டின் மேல் படை எடுத்துச் சென்றனர். தன் நாட்டின் எல்லையில் போர்முரசு கேட்ட பாஞ்சாலன், விஷயத்தைச் சேவகர்கள் மூலம் அறிந்தான். சிறுவர்கள் தன் நாட்டிற்குள் படை எடுத்து வந்து விட்டதை அறிந்து கோபம் கொண்டான். அரசகுமாரர்களும் பாஞ்சாலனைப் போருக்கு அழைத்தனர். பாஞ்சாலனோடு சண்டை போட முடியாமல், கௌரவர்களும் படைகளும் மெல்ல விலகிச் சென்றனர். அவ்வேளையில் அருச்சுனன் விட்ட அம்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாஞ்சால அரசனின் வில்லின் கயிற்றைத் துண்டித்தது.

அருச்சுனன் ஓடிச் சென்று அவனுடைய வில்லின் கயிற்றாலேயே, பாஞ்சாலனைக் கட்டினான். பின் அரசகுமாரர்கள் எல்லோரும் சூழ்ந்து கொண்டு, பாஞ்சாலனைத் துரோணரிடம் அழைத்து வந்தார்கள். துரோணர் அளவில்லாத மகிழ்ச்சி அடைந்தார். தன் முன் அவமானத்தினாலும் வெட்கத்தினாலும் தலையைக் குனிந்து நின்ற பாஞ்சாலனைப் பார்த்தார்.

“அரசனே, வறுமையின் பிடியில் நான் கஷ்டப்பட்டு உன்னிடம் நான் வந்தபோது என்னை நீ அவமானப் படுத்தினாய்!. அதற்கு ஈடாக இன்று நீ என் முன் அவமானப்பட்டு நிற்கிறாய். என் மாணவர்களின் வீரத்தின் முன் உன் வீரம் எங்கே போய்விட்டது? என்னுடைய மாணவர்கள் உன்னை வென்று விட்டதால், உன் அரசு முழுவதும் என் சொந்தமாகி விட்டது. ஆனாலும், நீ என்னிடம் முன்பே கூறியிருந்தபடி உன் நாட்டின் பாதியை உன்னிடம் ஒப்படைத்து உன்னை விடுதலை செய்கிறேன்.” என்று பாஞ்சாலனை விடுதலை செய்தார்.

www.tamilarangam.net

துரோணர் தன்னை அரசன் என்றும் பாராது அவமானப் படுத்தியதையும், சிறுவனாகிய அருச்சுனன் தன்னை வெற்றி கொண்டு விட்ட வெட்கத்தினாலும் வேதனை கொண்டவாறே, தலையைக் குனிந்து கொண்டு பாஞ்சாலன் தன் நாட்டுக்குச் சென்றான். அரசகுமாரர்கள் பாஞ்சால அரசனைப் போரில் வென்ற செய்தி எல்லா இடங்களுக்கும் பரவியது. அஸ்தனாபுரத்து மக்கள் மிகுந்த மகிழ்ச்சி கொண்டனர். அரண்மனையில் உள்ளவர்களும் மிகப் பெருமிதம் அடைந்தார்கள்.

-தொடரும்-

++++++++++++++++++++++++++++++++++++++++

நீதி ஒரு நாட்டின் உணவைப் போன்றது. அதற்காகப் பசியோடு இருப்பவர்கள் ஏராளம் பேர்.

-பிரையண்ட்-

++++++++++++++++++++++++++++++++++++++++

++++++++++++++++++++++++++++++++++++++++

ஓய்வு நல்ல உடைதான். அதற்காகத் தொடர்ந்து உடுத்திக் கொண்டிருப்பது நல்லதல்ல.

-போத்துக்கேயப் பழமொழி-

++++++++++++++++++++++++++++++++++++++++

www.tamilarangam.net

# வினா விடைப் போட்டி

1. இந்துத் துறவி தான் இவர் இந்துக்களும் முஸ்லீம்களும் ஒற்றுமையாக வாழ வேண்டுமென்று விரும்பியவர்.
சுந்தரம், வாசனை, அம்மி, பல்லவி, கரும்பு, இஸ்லாம், பானம், காந்தம், தளிர், பயிர்.

௨. இந்தியாவில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் முதலாவது பட்டதாரி இவர்.
சிற்றன்னை, வைகை, தாளம், அமோகம், தராதரம், அரம்பை, விருப்பம், பித்தளை, பள்ளம், பளை.

3.கிறிஸ்துவ வேத நூலான பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்த இந்துப் பெரியார்.
ஆபத்து, சாறு, அமுதம், கடல், நாமம், அவதி, அல்லல், கர்வம்.

4.தற்போதைய இங்கிலாந்து அரசிக்குக் கணிதம் கற்பித்த ஆசிரியர் இவர்.
செல்வம்,சுகபோகம், இந்திரன். தந்தம், பம்பரம், சல்லி, பாங்கி, சிங்கம், மஞ்சம்.

5.இலங்கையரான இவர் தென்னிந்தியத் திரைவானில் புகழ் பெற்ற படப்பிடிப்பாளர் மட்டுமல்ல. பரிசு பெற்ற படங்களைத் தந்த இயக்குனரும் கூட.
பாராட்டு, கல்லுளி, மழை, கேடயம், பொந்து, பத்திரம், சிராய்ப்பு.


முடிவு திகதி: 10 .04.98

www.tamilarangam.net

# முதலையும் குரங்கும்

ஒரு பெரிய ஏரியில் நிறைய முதலைகள் வசித்தன. அவ்வேரிக்கரையில் ஒரு உயர்ந்த நாவல்மரம் நின்றது. அம்மரத்தில் ஒரு குரங்கு வசித்தது. குரங்கும் ஒரு ஆண்முதலையும் நீண்ட காலமாகச் சினேகிதமாய் வாழ்ந்து வந்தன. அம்முதலை தன் மனைவியுடன் அவ்வேரியின் சிறுதீவில் நீண்ட காலமாக வசித்து வந்தது.

அம்முதலையும் குரங்கும் ஒவ்வொருநாளும் நாவல்மரத்தடியில் சந்தித்து, உரையாடி விட்டுச் செல்லும். ஒவ்வொரு நாளும், குரங்கு முதலையின் மனைவிக்கு கனிந்த நாவல்பழங்களைக் கொடுத்து விடும். ஒருநாள் முதலையும், முதலையின் மனைவியும் வந்து குரங்கிடம் உரையாடி விட்டுச் சென்றன.



வீட்டுக்கு வந்ததும் பெண்முதலை, ஆண்முதலையிடம், ‘ குரங்கு தரும் பழங்கள் எவ்வளவு சுவையாக இருக்கின்றது. அதை உண்ணும் குரங்கின் ஈரலும் எவ்வளவு

www.tamilarangam.net

சுவையாக இருக்கும். எனக்குக் குரங்கின் ஈரலைச் சாப்பிட வெகு நாட்களாகவே ஆசை. என் ஆசையை நீங்கள் நிறைவேற்றுங்கள்." என்று கூறியது. "நான் எப்படிக் குரங்கின் ஈரலை எடுப்பது?" என்று ஆண்முதலை கேட்டது. அதற்குப் பெண்முதலை, "உங்கள் குரங்கு நண்பரை ஒருநாளைக்கு எங்கள் வீட்டுக்கு அழைத்து வாருங்கள். இங்கு அவர் வந்தால் நாம் இருவரும் சேர்ந்து உண்ணலாம்." என்றது. ஆண்முதலை அதற்கு மறுத்து விட்டது. 'நீங்கள் இதைச் செய்யாவிட்டால் நான் தற்கொலை செய்து விடுவேன்.' என்று பெண்முதலை பயமுறுத்தியது.

மறுநாள் காலை முதலை மரத்தடிக்கு வந்தது. குரங்கும் அங்கு நின்றது. முதலை, குரங்கிடம் "இன்று என் மனைவி உங்களை விருந்துக்கு அழைத்திருக்கிறாள். அதனால் நீங்கள் என் முதுகில் ஏறுங்கள். என்னுடன் வீடு சென்று விருந்துண்டு பின்பு நீங்கள் வீடு திரும்பலாம்." என்றது. குரங்குக்கு விருப்பமில்லை. அதனால் அது "நான் வரவில்லை." என்றது. முதலை வற்புறுத்திக் கேட்டது. அதனால் குரங்கும் சம்மதித்தது. முதலை குரங்கை முதுகில் ஏற்றிக் கொண்டு, தண்ணீரில் நீந்தத் தொடங்கியது.



www.tamilarangam.net

இரண்டும் போய்க் கொண்டிருக்கும் போது முதலை குரங்கினிடம், ""உங்களை எதற்குக் கூட்டிச் செல்கிறேன் தெரியுமா? எனது மனைவி உங்களின் ஈரலை உண்ண வெகு நாட்களாக ஆவலாக இருக்கிறாள். அதற்குத்தான் அழைத்துச் செல்கிறேன்."" என்றது. இதைக் கேட்ட குரங்கு உடனே சாதுரியமாக ""நண்பரே, இதை நீங்கள் மரத்தடியில் கூறியிருக்கக் கூடாதா? எனது ஈரலைத் துவைத்து உலர விட்டிருக்கிறேன். நீங்கள் அங்கு கூறியிருந்தால் அதை எடுத்து வந்திருக்கலாம்."" என்றது.

குரங்கின் வார்த்தையை நம்பிய முதலை உடனே குரங்குடன் திரும்ப மரத்தடிக்கு வந்தது. குரங்கு உடனே தாவி மரத்தில் ஏறிக் கொண்டது. முதலையைப் பார்த்து, ""இவ்வாறு நம்பிக்கைத் துரோகம் செய்வீர்கள் என்று நான் எதிர் பார்க்கவில்லை. உங்களிடம் வந்து உயிர் துறக்க நான் விரும்பவில்லை."" என்றது. இது கேட்ட முதலை தன் முட்டாள்தனத்தை எண்ணி வருந்தியது.

-கபிலன் பரமசிவம்-

++++++++++++++++++++++++++++++++++++++++

நீ சரியான வழியில் நடந்தால் கடவுள் உனக்குப் பயப்படுவார்.

-இத்தாலியப் பழமொழி-

++++++++++++++++++++++++++++++++++++++++

www.tamilarangam.net

# சார்லி சப்ளின்



1928இல் "சார்க்கஸ்" படம் திரையிடப் பட்டது. எல்லா இடங்களிலும் மிகச் சிறப்பாக ஓடி வசூலிலும் வெற்றி பெற்றது. 27-28ஆம் ஆண்டுக்கான சிறப்பான படமாகவும் இப்படம் தேர்ந்து எடுக்கப்பட்டுக் கௌரவிக்கப் பட்டது. இந்தப் படம் திரையிடப்பட்ட சமயம் சார்லியின் தாயாரான ஹன்னா சப்ளின் சுகயீனமுற்றிருப்பதாகச் சார்லிக்குச் செய்தி கிடைத்தது. உடனேயே தாயார் இருந்த வைத்தியசாலைக்குச் சென்றார்... தாயார் பேச முடியாத நிலையில் இருந்தார். சார்லி விம்மலோடு "உங்களுக்கு ஒன்றும் இல்லை. நோய் மாறியதும் நான் வந்து அழைத்துக் கொண்டு வீட்டுக்குப் போய் விடுவேன்" என்று ஆறுதல் வார்த்தைகள் கூறினார்.

கண்களை அகல விரித்துப் பார்த்த தாயார் திரும்பவும் கண்களை மூடிக் கொண்டார். அடுத்த நாள் ஸ்ருடியோவில் படப்பிடிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில், தாயார் இறந்து விட்டதாகச் செய்தி வந்தது. காலதாமதமின்றிப்

www.tamilarangam.net

மருத்துவமனைக்கு விரைந்து சென்றார் சார்லி. அண்ணனான சிட்னி உடல் நலமில்லாமல் இருந்ததால் மரணச் சடங்கில் கலந்து கொள்ள முடியவில்லை. சார்லியே தனித்து நின்று கடமைகளைச் செய்தார். இளவயதில் வறுமையுடன் போராடிய ஹன்னா இறந்த போது புகழ் பெற்ற நடிகனான சார்லிசப்ளினின் தாய் என்ற பெருமையுடன் மீளாத்துயிலில் ஆழ்ந்திருந்தார்.

மரணச்சடங்கில் பலர் கலந்து கொண்டிருந்தார்கள். எதிர்பாராதவர்களும் வந்திருந்தனர். அவர்களுள்ளும் சார்லியின் இரண்டாவது மனைவியும், சார்லியின் இரண்டு குழந்தைகளும் குறிப்பிடப் பட்டவர்கள் ஆவார்கள். தாயின் மீது ஆழ்ந்த அன்பு கொண்ட சார்லி தனது சுயசரிதையில், அன்னையை நினைவு கூரும் வேளையில், "அன்னை ஹன்னா சப்ளின், ஹலிவுட் கல்லறையில் அமைதியாக இன்றும் உறங்குகின்றார். " என்று எழுதியிருக்கின்றார்.

சர்க்கஸ் படம் பெற்ற வெற்றிக்குப் பின் சார்லி "சிற்றி லைற்-[illegible] படத்தை எடுத்தார். படத்தைத் தொடங்கும் வேளையில், சார்லியின் நண்பர் ஒருவர் சார்லியிடம் ஊமைப் படமாக இல்லாமல், பேசும் படத்தைப் பார்த்ததாகச் சார்லியிடம் கூறினார். அதன் பின் சில நாட்களின் பின் வார்னர் சகோதரர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பேசும்படத் தயாரிப்பில் ஈடுபட்டிருப்பதாகவும் சார்லி அறிந்தார்.. வேறு நிறுவனங்களும் பேசும்படங்களைத் தயாரிக்க இருப்பதாக நண்பர்கள் கூறினார்கள். சார்லியையும் பேசும்படம் எடுக்கும்படி வற்புறுத்தினார்கள்.

அதற்குச் சார்லி உடன் படவில்லை. சிற்றி லைற் சார்லியின் வழமையான படத்தைப் போலவே, ஊமைப்படமாகவே வெளிவந்தது. படம் முடிவடைய மூன்று வருடங்கள் பிடித்தன. இதே வேளையில் பேசும்படம் அறிமுகமாகிப் பல இடங்களில் வெற்றி அடைந்து கொண்டிருந்தது. இதனால் சார்லிக்குத் தன்னையும் அறியாமல் பயமேற்பட்டது. படத்தை ஊமைப்படமாக இல்லாமல் அதற்குப் பின்னணி இசையைத் தானே தயாரித்துப் படத்தை வெளியிட்டார்.
நியூயோர்க்கிலுள்ள பெரிய தியேட்டரில் படம் காண்பிக்கப் பட்டது.

நிர்வாகியின் அறைக்குள் ஒளிந்திருந்து கொண்டு சார்லி சனங்களை நோட்டமிட்டார். சனங்கள் வெளியே போவதும் வருவதுமாகச் சார்லி கற்பனை செய்தார். கூடவே சனங்களுக்குப் படம் பிடிக்கவில்லை என்றே எண்ணிக் கொண்டார். ஆனால் சார்லிக்குக் கூடுதல் வசூலைக் கொடுத்த படமாக சிற்றி லைற் அமைந்தது. அந்தப் படத்தை எடுத்துக் கொண்டு லண்டனுக்குப் புறப்பட எண்ணினார் சார்லி. -தொடரும்-

www.tamilarangam.net

# கரடிப் பொம்மை





பொம்மை நல்ல பொம்மை
புதிய கரடிப் பொம்மை
அம்மா தந்த பொம்மை
அழகு மிக்க பொம்மை




சாவி கொடுத்தால் ஆடும்
தாளம் மெல்லப் போடும்
காவிச் சட்டை உடம்பில்
கண்ணில் மணி மின்னும்

நாலு சில்லில் ஓடும்
நன்கு சுழன்று ஆடும்
காலிரண்டும் ஆட்டிக்
கரணம் போடும் பொம்மை

-வித்துவான் குமாரசாமி-

www.tamilarangam.net



## கடனாளி



சிறுப்பிட்டி என்ற ஊரில் குகநாதன் வசித்து வந்தான். அவன் மிகவும் ஆடம்பரமாக வாழ்ந்து வந்தான். தன்னுடைய சம்பளம் போதாமையால் கடன் பட்டும் ஆடம்பரமாக வாழ்ந்தான். இதனால் ஊரில் உள்ள பலரிடமும் கடன் கேட்டான். குகநாதனின் ஆடம்பரத்தைப் பார்த்த ஊரவர்கள் திரும்பவும் கடன் கொடுக்க மறுத்தார்கள்.

அவனுக்குக் கடன் பட்டு வாழ்வது கஷ்டமாக இருந்தாலும், ஆடம்பரத்தை விட்டுவிட மனம் விரும்பவில்லை. எனவே, அடுத்த ஊரில் வசிக்கும் தனது

www.tamilarangam.net

அண்ணனிடம் சென்றான். அண்ணனான கணநாதனோ சிக்கனமாக வாழ்ந்து வந்தான். தனக்குக் கடனாகப் பணம் தரும்படி கணநாதனிடம் கேட்டான்.

“கடனாகக் கொடுக்கும் பணத்தை எப்படித் திருப்பித் தருவாய்” என்று கணநாதன் கேட்டான். அதற்கு “சம்பளத்தில் கொஞ்சம் கொஞ்சமாகக் சேர்த்துத் தருவேன்.” என்றான் குகநாதன். “நீ முன்பே இப்படிச் சேர்த்திருக்கலாம் தானே” என்ற அண்ணனிடம், “இவ்வளவு காலமும் தெரியாமல் இருந்து விட்டேன்.” என்றான் குகநாதன்.

“இப்பொழுது தெரிந்து கொண்டாயல்லவா!. நான் கடன் கொடுக்க முடியாது. போ” என்றான் கணநாதன். அன்று முதல் குகநாதன் பணம் சேமிக்கத் தொடங்கினான்.

++++++++++++++++++++++++++++++++++++++++

நன்றாகப் பேசுவது நல்லது தான். ஆனாலும் நன்றாகச் செய்வது அதனிலும் நல்லது.

++++++++++++++++++++++++++++++++++++++++

www.tamilarangam.net

# இறுமாப்பு

தெளிவாக ஆறு ஓடிக் கொண்டிருந்தது. அருகில் பச்சைப்பசேல் என்ற புல்வெளி. அதன் அருகில் சிறு காடு போலத் தோற்றம் கொடுக்கும் காணி, கம்பி வேலி போட்டிருந்தது. அதில் தூரம் தூரமாக வேம்பு, பலா, மா, விளாத்தி மரங்கள் காணப்பட்டன. ஒரு காலத்தில் அந்த நிலம் நன்கு கவனிக்கப் பட்டிருந்தது. அந்த நிலத்துக்குச் சொந்தக்காரர் நாட்டை விட்டு யுத்தத்தின் காரணமாக வேறு நாட்டில் குடியேறியிருந்தார்.

அதன் பின் அவர் சென்ற நாட்டிலேயே இறந்து விட்டார். காணியைக் கவனிக்க ஆட்கள் இல்லாமையால் காணியில் தானே முளைத்துப் பெரிய மரமாக விஷமரமொன்றும் காணப்பட்டது. அடர்ந்து வளர்ந்த அந்த மரத்தின் கீழ்ச் சில பறவைகள் இறந்து கிடந்தன. பறவைகள் அதன் பழங்களைச் சாப்பிடுவதில்லை. புதிய பறவைகள் சில, பழம் விஷமென்று தெரியாமல் உண்டு இறந்து விடும். அவைகளே மரத்தின் அடியில் விழுந்து இறந்து கிடந்தன.

அதன் பழங்களையோ, இலைகளையோ யாரும் சீண்டுவதில்லை. பச்சைப்பசேலென்ற இலைகளும், அழகான சின்னச் சின்னப்

www.tamilarangam.net

பழங்களையும் கொண்டு அந்த மரம் அழகாக இருந்தது. அதனடியில் புல் பூண்டுகள் கூட இருக்கவில்லை. அருகில் இருந்த மாமரத்தின் கீழே ஒரே குப்பையாக இலைகளும், மாம்பிஞ்சுகளும், மாங்கொட்டைகளுமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தது. மாமரக் கிளைகளில் பறவைகள், அணில்கள் ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்தன.

மாமரத்தைப் பார்த்துச் சிரித்தது விஷமரம் ""மாமரமே, என்னைப் பார். நான் எவ்வளவு அழகாக இருக்கிறேன். என்னைச் சீண்டுவதற்குக் கூட எல்லோரும் பயப்படுகின்றார்கள். உன்னை நிம்மதியாக இருக்க யாரும் விடுகிறார்கள் இல்லை"" என்றது. ""அதற்கு என்ன செய்வது?. எல்லோரும் ஒரே மாதிரி இருக்க முடியுமா?. என் காய்களும், கனிகளும் சுவையாக இருக்கின்றன. அதனால் பறவைகளும் அணில்களும் என்னைத் தூங்கக் கூட விடுவதில்லை. "" என்று பெருமூச்சு விட்டது மாமரம்.

""இல்லை என்று சொல்லாமல் கொடுப்பதால் வரும் துன்பத்தைப் பார்த்தாயா!. கொஞ்சம் கெட்ட தன்மையும் வேண்டும். அப்போதுதான் வாழ முடியும். இல்லையென்றால் உன்னைப் போல அழகற்ற நிலைதான்."" என்றது விஷமரம்."உன்னைப் போல இருந்து விட்டால் நாம் வாழ்வதில் என்ன பலன் இருக்கப் போகின்றது?.


www.tamilarangam.net

என் காய்கனிகளை எத்தனை உயிர்கள் உண்டு வாழ்கின்றன. அந்தப் புண்ணியம் எனக்குப் போதும். பெற்ற தாய்க்குரிய மகிழ்ச்சி எனக்கு இவற்றால் உண்டாகின்றது."" என்றது மாமரம்.

அந்த நேரத்தில் பெரிய கார் ஒன்று வந்தது. அதிலிருந்து கனவான் ஒருவரும் வேறு ஆட்களும் அங்கு வந்தார்கள். வந்தவர்கள் யார்? என்ற சிந்தனையோடு அவர்களை ஆராய்ந்தன மரங்கள். வந்தவர்கள் நிலம் முழுவதையும் நோட்டமிட்டனர். கனவான் மற்றவர்களைப் பார்த்து, ""இந்தக் காணி எனக்குத் தான் என்று தாத்தா இறக்கும்போது கூறியிருந்தார். இதில் வீடு கட்டி என் மனைவியோடும், பிள்ளைகளோடும் வாழ ஆசை. அதற்காகத்தான் உங்களை இங்கே கூட்டிக் கொண்டு வந்தேன்."" என்றார்.

""அப்படியானால் இந்த மாமரம் வெட்ட வேண்டும்""" என்றார் வந்தவர்களுள் ஒருவர். முன் பக்கம் அழகில்லாமல் இருக்கும். வெட்டி விட்டு காணியையும் திருத்த வேண்டும். இந்த வருடத்துக்குள் வீட்டைக் கட்டி விட வேண்டும். நாளை மனைவி பிள்ளைகளை அழைத்து வந்து காணியைக் காட்ட வேண்டும். அவர்களும் ஆசைப்படுகிறார்கள். நீங்களும் வாருங்கள்."" என்று சொல்லி விட்டு வந்தவர்கள் புறப்பட்டனர்.

www.tamilarangam.net






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விஷமரம் விஷமத்துடன் சிரித்துக் கொண்டது. பின் மாமரத்தைப் பார்த்து, ""நீ நாளையோடு இறக்கப் போகிறாய்!. ஏதோ நீதான் பரோபகாரி என்று தம்பட்டம் அடித்தாயே. இப்போது பார்த்தாயா! அழகான என்னை வெட்ட யாருக்காவது மனம் வருமா!"" என்று மாமரத்துக்குக்காக போலியாக அனுதாபம் சொன்னது விஷமரம். மாமரம் எதுவுமே பேசாமல் சோகத்துடன் இருந்தது. மாமரத்தில் ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்த பறவைகளும், அணில்களும் எதுவுமே தெரியாமல் ஓடி விளையாடிக் கொண்டிருந்தன.

மாமரம் ""குழந்தைகளைப் போல என் கிளைகளில் ஓடி விளையாடிக் கொண்டிருக்கும் இவைகள் நாளை என்ன செய்யப் போகின்றன."" என்று மனதுக்குள் அழுது கொண்டது. அடுத்தநாள் காலையில் கனவான் குடும்பத்தோடும், மற்றவர்களோடும் வந்தார். எல்லோரும் காணியைச் சுற்றிப் பார்த்தார்கள். குழந்தைகள் ஓடியாடி விளையாடிக் கொண்டு நின்றார்கள். மற்றவர்கள் விலகி நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். அபபோது ""மாமரம் வெட்டி விடுவதுதான்"" என்று எல்லோருமே முடிவு செய்தனர். அடுத்தநாள் துப்பரவு வேலைகள் செய்யத் தொடங்க வேண்டும் என்றும் பேசிக் கொண்டார்கள்.

www.tamilarangam.net

அந்த நேரத்தில் மாமரத்தின் மேலிருந்து பழுக்கத் தொடங்கிய காய் கீழே விழுந்தது. அதை விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள் எடுத்துச் சாப்பிட்டார்கள். அதன் சுவை அவர்களுக்குப் பிடித்திருந்தது. அவர்களுள் பெரியவன் ““அம்மா இதைச் சாப்பிட்டுப் பாருங்கள்.”” என்று சொல்லிக் கொண்டு சென்று தாயாரிடம் கொடுத்தான். கனவானின் மனைவியும் அதைச் சாப்பிட்டாள். ““எவ்வளவு இனிப்பாக இருக்கிறது. கற்கண்டு இனிப்பதைப் போல என்று சொல்லிக் கொண்டே, வேறொரு மாம்பழத்தைப் பறித்து எல்லோருக்கும் கொடுத்தாள்.


அதன் சுவை எல்லோருக்கும் பிடித்திருந்தது. கனவானின் மனைவி அவரிடம், ““மாமரம் வெட்ட வேண்டாம். குளிர்ச்சியாக இருந்தாலும் அந்த மரத்தால் எந்த விதமான பிரயோசனமும் இல்லை. அதை வெட்டி விடுங்கள். மாமரம் இருக்கட்டும். வீட்டைச் சிறிது தள்ளிக் கட்டிக் கொள்ளலாம்.”” என்றாள். விஷமரம் எதுவும் புரியாமல் திகைத்து நின்றது. மாமரம் சந்தோஷத்துடன் இலைகளைச் சிலிர்த்துக் கொண்டது. தன் மீது விளையாடிக் கொண்டு பழங்களை, காய்களைக் கொத்தும் பறவைகளையும் அணில்களையும் பெருமையுடன் பார்த்துக் கொண்டது.

-பாமினி அருள்வரதன்.-

www.tamilarangam.net

## மனித வெறி





பூச்சி தன்னைக் கொன்று பல்லி
பசியைப் போக்குமே!- புள்ளி
மானைக் கொன்று தின்று புலியும்
பசியைப் போக்குமே!

பூனை எலியைக் கொன்று தின்று
பசியைப் போக்குமே! - புற்றுப்
பாம்பும் குளத்துத் தவளை விழுங்கிப்
பசியைப் போக்குமே!

வானில் வட்டமிட்டுப் பருந்து கோழிக்
குஞ்சைத் தூக்குமே!- கொத்திக்
கொன்று அந்தக் குஞ்சை உண்டு
பசியைப் போக்குமே!

பசிக்குத் தானே இவைகள் எல்லாம்
உயிரைக் கொல்லுமே! - ஆனால்
பாவி மனிதன் தன் இனத்தைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தானே அழிக்கிறான்!

சாதி, சமயச் சண்டை போட்டு
அழிந்து போகிறான்.!- கொள்கை
வேறுபாட்டால் குத்தி வெட்டிக்
குதூகலிக்கிறான்.!
பசிக்குக் கொன்று தின்றால் ஒன்றும்
பாவமில்லையே! - மனித
வெறிக்கு மனிதன் அழிந்து போதல்
பாவமில்லையோ?

-புலவர் பூங்கோதை-



www.tamilarangam.net

# தந்தையும் மகனும்



ஒரு ஊரில் ஒரு கருமி இருந்தார். அவர் ஏழைகளைக் கண்டாலும் ஐந்து சதம் கூடக் கொடுக்க மாட்டார். ஆனாலும் நன்றாக மது அருந்துவார். ஆனால் அவரது முன்னோர்கள் எல்லோரும் நன்றாகத் தானதருமங்களில் ஈடுபட்டவர்கள். அவருடைய தந்தையார் இறந்து சொர்க்கத்தில் வாழ்ந்திருந்தார். மகன் யாருக்குமே கொடுக்காமல் வாழ்வது அவருக்கு வேதனையாக இருந்தது.

அதனால் அவர் விண்ணுலகத்தில் இருந்து பூவுலகத்துக்கு வந்தார். வந்தவர் சும்மா வரவில்லை. மகனைப் போலவே உருவம் கொண்டு வந்தார். நேராகவே அரசனிடம்

www.tamilarangam.net

சென்றார். "அரசே, என்னுடைய சொத்துக்களை உங்களுக்குத் தருகிறேன். ஏற்றுக் கொள்ளுங்கள்" என்றார். அரசரோ, "என்னிடம் நிறையச் சொத்துக்கள் இருக்கின்றன. எனக்குத் தேவையில்லை." என்றார்.

மகன் இல்லாத சமயத்தில் வீட்டுக்குள் நுழைந்தார். மனைவியும் பிள்ளைகளும் அவரை வித்தியாசமாக நினைக்கவில்லை. அவர் மனைவியிடம், தான் தருமம் செய்யப் போவதாகக் கூறினார். அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தாலும், யாருமே எதுவும் கூறவில்லை. வீட்டிலிருந்து கொண்டு தன் மகனின் மனைவி, மக்கள், வீட்டுக்கு வருவோர் போவோர் எல்லோரிடமும் தன்னைப் போலவே, இன்னொருவன் இருக்கிறான். அவனைக் கண்டால் அடித்துத் துரத்துங்கள்" என்றார்.

மது போதையில் வீதியில் நடந்து வந்த கருமி, தன் வீட்டுப் பொருட்களில் சிலவற்றை வண்டியில் ஒருவன் கொண்டு செல்வதைக் கண்டார். வண்டியில் உள்ளவனை மறித்து "நான் இல்லாத வேளையில் என் வீட்டுப் பொருட்களை எடுத்துச் செல்கின்றாயா?" என்றார். அவனோ, அவரைத் தள்ளி விழுத்தி விட்டான். "மாறு வேடத்தில் இருந்து கொண்டு

www.tamilarangam.net

எங்களையே மிரட்டுகின்றாயோ?" என்று ஏசிக் கொண்டு சென்றான். கருமிக்கு ஆச்சரியமாக இருந்தது. என்னைப் போலவே இன்னொருவனா! என்று யோசித்துக் கொண்டே வீட்டுக்கு வந்தான்.

வீடு வந்ததும் மனைவியும், மக்களும் துரத்தித் துரத்தி அடித்தார்கள். வேலைக்காரர்கள் நடு வீதி வரைக்கும் இழுத்துக் கொண்டு வந்து விட்டனர். நேராக மன்னரிடம் சென்றார் கருமி.. "அரசே, என் வீட்டுச் சொத்தை எல்லாம் அரசுரிமை ஆக்கிக் கொண்டீர்களா?. என் வீட்டுச் சொத்தை எல்லாம் ஊரவர்கள் எடுத்துச் செல்லுகிறார்களே!" என்று முறையிட்டார். அரசரோ, "நீர் தான் என்னிடம் உமது சொத்துக்களை என்னை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டீர். நான் மறுத்து விட்டேன். இப்போ, இப்படிப் பொய் சொல்லுகிறீரே?" என்றார்.

"அரசே, நான் பொய் சொல்லுகின்றேனா? அப்படிச் சொல்லுவதால் எனக்கு என்ன இலாபம்." என்று சொல்லி அழத் தொடங்கினார். அரசரும் யோசித்து விட்டு, சேவகர்களை கருமியின் வீட்டுக்கு அனுப்பினார். அங்கே கருமியின் உருவத்திலேயே வேறு ஒருவர் இருப்பதைக் கண்டதும், சேவகர்கள்

www.tamilarangam.net

அவரைக் கைது செய்து அரசன் முன் கொண்டு வந்து நிறுத்தினார்கள். அரசனுக்கோ யார் உண்மையான கருமி என்பது தெரியவில்லை. மனைவி, மக்கள், அயலவர்கள் யாருக்குமே அடையாளம் சொல்ல முடியவில்லை. தான் இனி எப்படி நிரூபிப்பது என்று தெரியாமல் கருமி மயக்கம் போட்டு விழுந்து விட்டார்.

அப்போது கருமியின் தந்தை மகனை எழுப்பினார். "மகனே, நான் உன் தந்தை. உன்னை நல்வழிப் படுத்தவே, பூவுலகத்துக்கு வந்தேன். நீ அடைந்திருக்கும் சொத்துக்கள் யாவும் நானும், உன் மூதாதையினரும் சேர்த்தவை. தான தர்மங்கள் செய்தோம். இச் சொத்துக்கள் நாம் இருக்கும் போது அனுபவிப்பதற்குத் தான். அதை நல்ல வழியில் அனுபவிக்க வேண்டும். அப்படிச் செய்தால் நாமும் எமது சந்ததியினரும் நல்ல நிலையில் வாழலாம். இனியாவது நல்லவனாக வாழ்ந்து விடு" என்று கூறி விட்டுப் போனார்.

அன்று முதல் கருமியும் மனம் மாறி நல்லவனாகத் திருந்தினார். தன் மூதாதையினரைப் போல தான தருமங்கள் பல செய்தார். அவரை நாட்டு மக்கள் வள்ளல் என்று போற்றினார்கள்.

www.tamilarangam.net

# பாரதியார்



பாரதியார் இவர் பாரதியார்
பாட்டுப் பாடிடும் பாரதியார்
வீரராம் இவர் பாரதியார்-நாட்டு
விடுதலைக் கவிஞர் பாரதியார்

இந்திய நாட்டு விடுதலைக்கே-இவர்
எழுதிய பாட்டுக்கள் ஆயிரமே
முந்திய மூடப் பழக்கங்களை-முட்டி
மோதி யொழித்தவர் பாரதியார்.

பாரதியார் இவர் பாரதியார் -வீரப்
பாட்டுப் பாடும் பாரதியார்


-நாரா நாச்சியப்பன்-

வெண்காயம் கிடைத்ததற்கே ஒருவன் மகிழ்ந்து துள்ளினால், வெல்லம் கிடைத்தால் என்ன செய்வானோ!

-அரேபியப் பழமொழி-

www.tamilarangam.net

# ஒரு பொய்



வகுப்புப் பாடம் நடந்து கொண்டிருந்தது. அன்று அரிச்சந்திரனின் கதை பற்றிப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார் ஆசிரியர். நந்தனோ, விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கிய மைனாக்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். ஆசிரியர் நந்தனைக் கவனித்தார். ""நந்தா, பாடம் படிக்கும் போது அங்கே என்ன பார்வை! என்று கோபத்துடன் கேட்டார்.

பார்த்ததைக் கூற முடியாமல் நந்தன் தலையைக் குனிந்து கொண்டான். ஆசிரியர் திரும்பவும் கேட்டார். நந்தன் மைனாவைப் பார்த்துக் கொண்டிருந்ததைக் கூறினான். ""ஏன், மைனாவை ஒருக்காலும் நீ பார்க்கவில்லையா?. எழுந்து வகுப்புக்கு வெளியே போய் நில். நின்று மைனாக்களைப் பார்."" என்று ஆசிரியர் நந்தனை வெளியேற்றி விட்டார். வகுப்பு முடிந்ததும், ஆசிரியர் நந்தனை அருகில் அழைத்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

""படிப்பிக்கும் போது பாடத்தைக் கவனிக்காமல் ஒரு பிரயோசனமும் இல்லாமல் ஏன் மைனாவைப் பார்த்துக் கொண்டிருந்தாய்?"" என ஆசிரியர் கேட்டார். ""படித்ததை விடவும் பார்த்ததில் பிரயோசனம் உண்டு. சேர்"" என்றான் நந்தன். ஆசிரியருக்கு அவன் பேசுவது கோபத்தை வரவழைத்தது. ""என்னடா பிரயோசனம்?."" என்று ஆசிரியர் கேட்டார். ""தான் உண்டு, தன் வேலை உண்டு"" என்று மைனா உணவு தேடுகின்றது. உண்ணுகின்றது. முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றது. தன் குஞ்சுகளைக் காக்கின்றது. வளர்க்கின்றது. அரிச்சந்திரன் என்ன செய்தான் சேர். ஒரு பொய் சொல்லியிருந்தால், அரச வாழ்க்கையைத் துறந்து, மனைவியை விலைக்கு விற்று, தானும் கஷ்டப் பட்டிருக்கத் தேவையில்லைத் தானே"" என்றான் நந்தன் சிரித்துக் கொண்டே.

ஆசிரியர் மௌனமானார். அவன் சொல்வதிலும் நியாயம் இருந்தது. தற்காலத்துக்கு அது பொருத்தமானது தான். பிள்ளைகள் நிறையச் சிந்திக்கத் தொடங்கியிருப்பது அவருக்குத் தெரிந்தது.

++++++++++++++++++++++++++++++++++++++++

உனக்குக் கோபம் வரும்போது கண்ணாடியில் உன் முகத்தைப் பார். உனக்கே வெட்கமாக இருக்கும். கோபம் தணிந்து விடும்.-

-திருமுருக கிருபானந்த வாரியார்-


++++++++++++++++++++++++++++++++++++++++

www.tamilarangam.net

Nektar für die Kinder

Nectar pour les enfants

Nectar for the childrens



உண்ண உணவின்றி,
உடுக்க உடையின்றி,
கல்வி அறிவின்றி,
யுத்தம், கலவரங்களால்,
இன்னலுறும் இளம்சிறார்களுக்கு
இச்சஞ்சிகையைக்
காணிக்கையாக்குகின்றோம்.

புனிதமலர் ராஜேஸ்வரன்

"Siruvar Amutham"
Alefstr- 11
50189 Elsdorf
GERMANY
02271 / 66527

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்